**செய்தி வெளியீடு எண்:519** **நாள்: 08.08.2017**

# செய்தி வெளியீடு

நாடு முழுவதும் ஒரே மாதிரியான வரிவிகிதம் நடைமுறைப்படுத்துவதற்காக 01.07.2017 முதல் சரக்கு மற்றும் சேவை வரி (சமசே) அமல்படுத்தப்பட்டது.

இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரி நிர்வாகம், அமல்படுத்துவதற்கு துணையாகவும் மற்றும் கணினி உள்கட்டமைப்பிற்காகவும் சரக்கு மற்றும் சேவை வரி வளையம் நிர்மாணிக்கப்பட்டு சரக்கு மற்றும் சேவை முணையம் www.gst.gov.in உருவாக்கப்பட்டுள்ளது.

04.01.2017 முதல் பதிவுகள் சரக்கு மற்றும் சேவை வரி முணையத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு வணிகவரித்துறையில் பதிவுபெற்ற வணிகர்கள் தாமாகவே சரக்கு மற்றும் சேவை வரி முணையத்தில் பதிவு செய்து கொண்டு அதற்கான பயனாளர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை பெற்றுள்ளனர்.

டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ் (குழுமம் எனில்) அல்லது மின் கையொப்பம் (உரிமையாளர் / பங்குதாரர் எனில்) ஆதார் எண் பயன்படுத்தி சரக்கு மற்றும் சேவை வரி முணையத்தில் வணிகர்கள் பதிவுசெய்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதுவரை 4.02,000–க்கும் அதிகமான வணிகர்கள் தங்கள் பதிவினை பூர்த்தி செய்துள்ளார்கள். ஏனைய வணிகர்கள் அனைவரும் சரக்கு மற்றும் சேவை வரி முணையத்தில் டிஜிட்டல் / மின் கையொப்பமிட்டு தங்கள் பதிவினை முழுமையாக பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அங்கீகரிக்கப்பட்ட நபரின் விவரங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் எனில் டிஜிட்டல் கையொப்பம், பிறர் எனில் மின்–கையொப்பத்துடன் வரிசெலுத்துவோர் வெற்றிகரமாக பதிவு செய்தால் மட்டுமே GSTR3B நமூனா சமர்ப்பிக்கவும் மற்றும் செலுத்தத் தகுந்த வரிப்பணத்தை GSTN முணையத்தில் செலுத்தவும் இயலும்.

எனவே அனைத்து வணிகர்களும் அவரவர் நிலைக்கு ஏற்ப கட்டாயமாக்கப்பட்டுள்ள டிஜிட்டல் கையொப்பம் அல்லது மின்–கையொப்பம் அளித்து குறிப்பிட்ட காலத்திற்குள் சரக்கு மற்றும் சேவைவரி முனையத்தில் பதிவினை பூர்ததி செய்து நமூனாக்கள் பதிவு மற்றும் வரி செலுத்தும் வசதியினை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளபபடுகிறார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**